செ.வெ.எண்.04/2025 நாள் : 06.01.2025

# திருநெல்வேலி மாவட்டம்

**2025–ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலினை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்கள்.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (06.01.2025) 2025–ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலினை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 01.01.2025–ஐ தகுதி நாளாகக் கொண்டு திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் மற்றும் நீக்கம் தொடர்பாக சிறப்பு சுருக்க முறைத்திருத்தப் பணிகள் 29.10.2024 முதல் 28.11.2024 வரை நடைபெற்றது. மேற்படி சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தின் போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தம் தொடர்பாக 32,754 மனுக்களும், நீக்கம் செய்திட 2,123 மனுக்கள் உட்பட மொத்தம் 34,877 மனுக்கள் பெறப்பட்டன.

18–19 வயதுடைய இளம் வாக்காளர்கள் சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு 9122 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் இறப்பு பதிவேட்டினை பரீசீலனை செய்து, அரசியல் கட்சி முகவர்கள் பரிந்துரையுடன் 31780 இறந்து போன நபர்கள் நீக்க செய்யப்பட்டுள்ளனர்.

கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் அனைத்தும் களவிசாரணை மேற்கொள்ளப்பட்டு 34,331 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2025ம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதநிதிகளின் முன்னிலையில் இன்று (06.01.2025) வெளியிடப்படுகிறது.

இறுதி வாக்காளர் பட்டியலின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 14,03,208 வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இவர்களின் 6,83,818 ஆண் வாக்காளர்களும் 7,19,236 பெண் வாக்காளர்களும் மற்றும் 154 மூன்றாம் பாலின வாக்காளர்களும் அடங்குவர்.

| வ. எண் | சட்டமன்ற தொகுதி | வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை | ஆண் வாக்காளர் களின் எண்ணிக்கை | பெண் வாக்காளர் களின் எண்ணிக்கை | மூன்றாம் பாலின வாக்காளர்களின் எண்ணிக்கை | மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 224.திருநெல்வேலி | 311 | 1,47,016 | 1,55,616 | 83 | 3,02,715 |
| 2 | 225. அம்பாசமுத்திரம் | 294 | 1,24,976 | 1,33,657 | 8 | 2,58,641 |
| 3 | 226.பாளையங்கோட்டை | 270 | 1,35,179 | 1,41,355 | 27 | 2,76,561 |
| 4 | 227. நாங்குனேரி | 306 | 1,44,008 | 1,50,779 | 13 | 2,94,800 |
| 5 | 228. இராதாபுரம் | 309 | 1,32,639 | 1,37,829 | 23 | 2.70.491 |
| | **மொத்தம்** | 1490 | 6,83,818 | 7,19,236 | 154 | 14,03,208 |

புதியதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள 18–19 வயதுடைய இளம் வாக்காளர்கள் உட்பட அனைவருக்கும் வண்ண புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா அவர்கள், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திரு.கண்ணா கருப்பையா அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திரு.காசி அவர்கள், தேர்தல் வட்டாட்சியர் திரு.பாலமுருகன் அவர்கள், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திருமதி.இசைவாணி அவர்கள், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.ஜெ.ஃபி கிரேசியா அவர்கள்உட்பட அரசியல் கட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம். திருநெல்வேலி.